Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு :
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 30 சனிக்கிழமை (15-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 360

### ஐ. தே. கட்சியின் அமைச்சரவை நேற்றுக் கூடியது

# தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் வழங்கிய நியமனங்கள் ரத்து!

## கூட்டத்தில் ஏகமனதாக முடிவு

(நமது நிருபர்)

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கான அறிவித்தல் வெளியான பின்பு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் வழங்கப்பட்ட அரச நியமனங்கள் அனைத்தையும் உடனடியாக ரத்துச் செய்வதென்றும்;

2002ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் சமர்ப்பிப்பதென்றும், நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் சமுர்த்தி அமைச்சரும் ஐக்கிய தேசிய முன்னணியின் விவசாயம் கால்நடை வளர்ப்பு அமைச்சருமான எஸ். பி. திஸநாயக்கா தவிர்ந்த ஏனைய 24 அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

இந்த அமைச்சரவைக் கூட்டம் சுமார் 45 நிமிடங்கள் வரை நடைபெற்றது.

இவ்வமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களுக்குத் தலைவர்களை நியமிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர

[8ஆம் பக்கம் பார்க்க]

# அமைச்சரவையில் இடம் பெறாத அமைச்சர்கள் பலர் அதிருப்தி!

[கொழும்பு]

அமைச்சரவை அந்தஸ்த்து இல்லாத அமைச்சர்களின் நியமனம் குறித்து அமைச்சர்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர்கள் அனைவரும் ஐக்கியதேசியக்கட்சியின் நீண்ட

தெரிவிக்கப்படுகிறது

1994ம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சியைக் கைப்பற்ற கடினமாக உழைத்தவர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்த்து இல்லாத அமைச்சுப்பதவிகள் ஒதுக்கப் பட்

மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மெலிந்த மொறகொட ரவி கருணநாயக்கா. கருணாசேனகொடித்துவக்கு, மகிந்த சமரசிங்க, ஜயலத் ஜயவர்த்தனா, உட்பட பலரும் அதிருப்தி அடைந்தநிலையில்உள்

## இளைஞரை கொலைசெய்த மூவருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

1981 யூன் 12 ஆம் திகதி பொது வீதியொன்றில் வைத்து இளைஞர் ஒருவரை சுட்டுக் கொன்ற வழக்கில் கொழும்பு உயர் நீதிமன்றம் மூவருக்கு மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. 1991 ஆம் ஆண்டு யூரர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு இத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், குற்றவாளிகள் மீளாய்வு மனு சமர்ப்பித்தனர். இப்பொழுது மீளாய்வு நடத்தப்பட்ட பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதி சரத்அம்பேபிட்டிய, நிமல் கருணநாயக்க, றோஹந்த ஐயம்பதி, நிகால் அனுரா பீரிஸ் ஆகிய மூவருக்கும் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார். (ந)

### பொ. ஐ. முன்னணி

## தேசிய அரசில் இணைய மேலும் ஒருமாத அவகாசம்

[கொழும்பு]

தேசிய நல்லிணக்கஅரசாங்கமொன்றில் இணைவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கா மேலும் ஒரு மாதகால அவகாசம் கொடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ரணில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வருமாறு

முன்னணி நிராகரித்திருந்த போதிலும், ஏ.எச்.எம் பௌசி போன்றவர்கள் அதனை வரவேற்றிருந்தனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமைகொழும்பு மாநகர முதல்வரின் இல்லத்தில்நடந்த ஐ.தே.கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே ரணில விக்கிரமசிங்கா, பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய அரசில் இணைவதற்கு

பெற்ற முதலாவது அமைச ... கொண்டனர். [8ஆம் பக்கம் பார்க்க]

# அமைச்சரவையில் இடம் பெறாத அமைச்சர்கள் பலர் அதிருப்தி!

[கொழும்பு]

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களின் நியமனம் குறித்து அமைச்சர்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர்கள் அனைவரும் ஐக்கியதேசியக்கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

1994ம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சியைக் கைப்பற்ற கடினமாக உழைத்தவர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுப்பதவிகள் ஒதுக்கப் பட்டமை ஐக்கியதேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மெலிந்த மொறகொட ரவி கருணநாயக்கா. கருணாசேனகொடித்துவக்கு, மகிந்த சமரசிங்க, ஜயலத் ஜயவர்த்தனா, உட்பட பலரும் அதிருப்தி அடைந்தநிலையில்உள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# மேலும் ஒருமாதஅவகாசம்

[கொழும்பு]

தேசிய நல்லிணக்கஅரசாங்கமொன்றில் இணைவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கா மேலும் ஒரு மாதகால அவகாசம் கொடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட ரணில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வருமாறு பொ.ஐ. முன்னணிக்கு அழைபபு விடுத்திருந்தார்

அவரின் அழைப்பை பொ.ஐ. முன்னணி நிராகரித்திருந்த போதிலும். ஏ.எச். எம் பௌசி போன்றவர்கள் அதனை வரவேற்றிருந்தனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமைகொழும்பு மாநகர முதல்வரின் இல்லத்தில்நடந்த ஐ.தே.கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே ரணில விக்கிரமசிங்கா, பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய அரசில் இணைவதற்கு மேலும் ஒருமாதகால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

(ந)

# பிரதம நீதியரசர்; பொலிஸ்மா அதிபர் விரைவில் இராஜினாமாச் செய்வர்!

[கொழும்பு]

பிரதம நீதியரசர் சரத்என் சில்வாவும் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கும் தத்தம் பதவிகளில் இருந்து விரைவில்இராஜினாமாச்செய்யவுள்ளனர் என்று அவர்களுடன்நெருங்கிய வட்டாரங்கள தகவல் வெளியிட்டுள்ளன.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தனது இராஜினமாத் தொடர்பாக அவரது நெருங்கிய சகா ஒருவரிடம் தெரிவித்துள்ளார் என்றும் அவர்தனது இராஜினமாத் தொடர்பாக ஜனதிபதி சந்திரிகாவுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இந்த இருவரினதும் இராஜினமா தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களிலும் பரவலாகப் பேசப் பட்டு வருகிறது.

(வ)

# தேசியநல்லிணக்க அரசுக்கு பொ.ஐ.முன்னணியின் 10எம்.பிக்கள் ஆதரவு?

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்கும் பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவின் முயற்சிக்கு பொதுஜன ஐக்கியமுன்னணியில் இருநது சுமார் 10பாராளுமன்றஉறுப்பினர்கள்ஆதரவுவழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக பொதுஜனஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌஸி பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய நல்லிணக்க அரசு
→ 8ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா இளைஞருக்கு நட்ட ஈடுவழங்கவேண்டும்

## அரசுக்குநீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இம்சிக்கப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த இளைஞரின் அடிப்படை உரிமைகள்மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளிதுதுள்ளது,

வவுனியாகூமாங்குளத்தைச் சேர்ந்த சிவலிங்கம் கோணசலிங்கம் என்ற இளைஞர் கடந்த வருடம் யூலைமாதம்13ம் திகதி வவுனியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டு எவ்வித காரணமுமின்றி களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அண்மையில்விடுதலை செய்யப்பட்ட இவர் சட்டமா அதிபர் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் உதவி இன்ஸ் பெக்டர் ஆகியோரை பிரதி வாதிகளாக குறிப்பிட்டு

[8 ம் பக்கம் பார்க்க]

# தேசிய அரசு அமைக்கும் ரணிலின் முயற்சிக்கு மகாநாயக்கர் வரவேற்பு

[கொழும்பு)

கட்சி பேதங்களை மறந்து தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சகலகட்சிகளையும் இணையுமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை மகாநாயக்க மடிகபன்சாகிததேரர் பாராட்டியுள்ளார்.

அவர்தனது பாராட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தற்போது நாட்டில்காணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்வரை சகலகட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசுஒன்றை உருவாக்குவதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் ஜனாதிபதி சந்திரிகா வழங்கவேண்டும். அவர்அப்படிச் செய்வாரானால் அதுஅவருக்கு கௌரவத்தைஏற்படுத்திக் கொடுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திருமதி இ. செல்வபாக்கியம் என்பவருடைய விசேட அ. அட்டை இல 0901021891 தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4078)

# யாழ். குடாநாட்டுக்கு தேவையான மண்ணெண்ணெய் கப்பல்மூலம் எடுத்துவர ஏற்பாடு

## மக்கள் சிரமம் விரைவில் நீங்கும்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் போக்க விரைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தவகையில், இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்கு வேண்டியமண்ணெண்ணெய் மற்றும் எரிபொருட்களை அனுப்பிவைக்கவிருப்பதாகவும்,

இதன்மூலம் யாழ் குடாநாட்டு மக்கள் எரிபொருட்களைப் பெறுவதில் கடந்த இருமாதங்களாக அனுபவித்துவந்த இன்னல்கள் தீரும் எனவும் அவ் வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதிக்கு பின்னர் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு மண்ணெண்ணெய் எடுத்துவரப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா கற்குழி பகுதியில் பொலிஸ் கான்ஸ்ரபிள் ஒருவர் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் நேற்று முன்தினமிரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையத்திற்குச் சென்ற பொழுதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக் கொல்லப்பட்ட உதய குமார வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள பாஸ் வழங்கும் பிரிவில்நீண்டகாலமாக கடமையாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-4)

## பரீட்சை திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடத்தும் சமய அறிவுப போட்டி பரீட்சைத் திகதியிலும் விண்ணப்ப முடிவுத் திகதியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலயக்கல்விப்பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே இம் மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு 04 நிலையங்களில் நடத்தப்படவிருந்த 04 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சை எதிர்வரும் ஜனவரி6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மு ப9.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதியும் இம்மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்படுகிறது. (எ-9)

## மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நான்கு அல்லது ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 5கிலோ மாவும் நான்கு அங்கத்தவர்களுக்குக் குறைந்தகுடும்பத்திற்குமூன்று கிலோமாவும் விநியோகிக்குமாறு வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் மேற்படி சங்கத்தின் கிளைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பியுள்ளார்.

பங்கீட்டுஅட்டையில் பதிந்து பட்டியல் தயாரித்ததுமேற்படி விநியோகத்தினை மேற்கொள்ளுமாறும் மூடையாக மா வழங்கக்கூடாதென்றும் அச் சுற்றுநிருபத்தில்மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பெறுமதியான முத்திரை தட்டுப்பாடு நீங்கியது

(யாழ்ப்பாணம்)

பெறுமதிவாய்ந்த முத்திரைகள் யாழ். குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தசில தினங்களாக 500, 1000, 100 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவியதையடுத்து, உடன் தபால் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதன் பேரில், நேற்று முன் தினம் இவை அனுப்பிவைக்கப்பட்டதாகவும்.

வந்தடைந்த பெறுமதியான முத்திரைகள் உப தபாலகங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## வத்தளைப் பிரதேச மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வத்தளைப் பிரதேசத்தில் நேற்றுக்காலை மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வத்தளை இலக்கந்த பிரதேசத்தில் பொலிஸார் கண்மூடித்தனமாகமேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் கொல்லப்பட்ட இச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் அதுதொடர்பாக நீதியானதும் பக்கச் சார்பற்றதுமான விசாரணைகளை நடத்துமாறும் கோரியுமே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. (உ-5)

## சிவாஜிலிங்கம் கொழும்புக்கு

(மந்திகை)

நாரந்தனைப் பகுதியில் நடைபெற்ற மோதல்சம்பவத்தில் காயமடைந்த ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் மேலதிக சிகிச்சைகளாகஇன்று சனிக்கிழமை கொழும்பு செல்லவுள்ளார். இதேவேளை எதிர்வரும்19ந் திகதிகூடவுள்ள பாராளுமன்றக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ளுவார்.

## மக்களை சமாதானமாக வாழ்விப்பதேநோக்கம்

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை அமைச்சரவை பதவியேற்ற பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதானத்திற்கான பெற்றோர் அமைப்பினருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுபேசியுள்ளார்.

இலங்கையிலுள்ளசகல இன மக்களையும் சகல உரிமைகளுடன் சமமாகவும் சமாதானமாகவும் வாழவைப்பதே தனது அரசாங்கத்தின்முக்கிய நோக்கம் என்று அப்பேச்சின் போது அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரையும் புலிகள் சிறைப்பிடித்து வைத்திருக்கும் படையினரையும் சமரசப் பேச்சுவார்த்தை மூலம் விடுவிக்கப்போவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைஎம்.சி. ஏ அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல், எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 4.00 மணிமுதல் வை எம். சி ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் பங்குபற்றுபவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலகத்தில் பெயர்களை பதிவுசெய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

## கட்சிக் காரியாலயங்களில் அமைதி

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் பூராகவும் தேர்தலையொட்டி சுறுசுறுப்பாக இயங்கிய கட்சிக்காரியாலயங்கள் பலவும் தற்போது வெறிச்சோடிக்காணப்படுகின்றன.

இதேவேளை தற்போது யாழ் குடாநாட்டில் தங்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 ஆம் திகதி கூடவுள்ள பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக அடுத்தவாரம்கொழும்பு செல்லவுள்ளனர் (உ-104)

## கால் பந்தாட்ட போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டப்போட்டி இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை எதிர்த்து யாழ் கோட்டமும், பலாலி ஆசிரிய கலாசாலையை எதிர்த்து கோப்பாய்க் கோட்டமும் மோதவுள்ளன.

இப் போட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள உப அதிபர் கப்டின் என் சோமசுந்தரம் கலந்துகொள்வார். (ந)

## இராணுவ வீரர் பலி

(கொழும்பு)

பதவியா புல்மோட்டை வீதியில் கடந்த 12 ஆம் திகதி மாலை 5. 20 மணியளவில் படைமுகாமிற்கு தண்ணீர் கொண்டு சென்ற பவுசருக்கு பாதுகாப்பளித்துச் சென்ற இராணுவத்தினர் மீது பதுங்கியிருந்த விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாக்குதலில் ஒரு இராணுவவீரர்படுகாயமடைந்தார்.

இராணுவத்தினர்திருப்பித் தாக்கியதில் விடுதலைப்புலிகள் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இராணுவ வீரர் பதவியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்இச்செய்தியை ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ளது. (எ)

## பரீட்சையின் முடிவு என்ன?

(கொழும்பு)

இலங்கை கல்விநிர்வாக சேவைகள் தரம் 3 ற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் இவ்வருட முற்பகுதியில் நடைபெற்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வெளியானலேக்கவுஸ்பத்திரிகைகளில்மீண்டும் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே முன்பு நடைபெற்ற இப்பரீட்சைக்கு என்ன நடந்தது? என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினை பரீட்சார்த்திகள் கேட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு சென்று மேற்படி பரீட்சைக்கு தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## மாணவர்களுக்கு மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ப.நே கூ.சங்கத்தினல் க பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள சங்கஎல்லைக்குட்பட்டமாணவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது

மாணவர்கள் பரீட்சைக்கான அனுமதியட்டைகளைக் காட்டிமண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## மாதாந்த உதவிப்பணம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்கள் மாதாந்த உதவிப்பணம் பெறும் 150 பேருக்கு ஒரு வருடத்திற்குரியகொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (உ)

## பண்ணிசைப் பாடல் கைநூல்

(நல்லூர்)

யாழ் சைவபரிபாலன சபையினால் நடத்தப்பட்டு வரும் தேவாரப் பண்ணிசைப் போட்டிகளுக்கான பண்ணிசைப் பாடல்கள் அடங்கிய கைநூல் ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சிகளை சபையின் தேர்வுப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

2002 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந் நூல் வெளிவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-103

## புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விளக்கமறியலில்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி எம். தஸநாயக்கா நேற்றைய தினம் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது வீட்டில் சட்டவிரோதமான ஆயுதங்கள் மற்றும் ரவைகள் காணப்பட்டதாகவும், இதனாலேயே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் சிலாபம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அபயநாயக்கா தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட இவர், புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## அதிபர் அறிவிப்பு

(ஏழாலை)

யா/மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்களையும் ஆசிரியர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்கும்படி அதிபர் மா நாகேந்திரசீலன் அறிவித்துள்ளார். (எ-12)

## வடமராட்சியில் படைகுவிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குஅம்பன் குடத்தனைப் பகுதிகளில் பெருமளவு இராணுவம்குவிக்கப்பட்டு வருவதனால் அப் பகுதி மக்கள் அடுத்து என்ன நிகழுமோ என பதற்றமடைந்து காணப்படுகின்றனர். (எ-12)

## கொழும்பில் மூடப்பட்ட வீதிகள் திறக்கப்படுகின்றன

[கொழும்பு]

அலரிமாளிகைக்கு முன்னால் உள்ள கொள்ளுப்பிட்டி வீதி பயணிகள், வாகனப் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் வீதி, மரிக்கார் மாவத்தை, ஜஸ்ரிஸ் அக்பர் மாவத்தை, மலே வீதி என்பவற்றின் ஊடாக புறக்கோட்டைக்கு வாகனங்கள் செல்லக்கூடியதாக அப் பாதை மீண்டும்திறந்துவிடப்பட்டுள்ளது.

இதேவேளை காலி முகத்திடல் நடுவீதி, லோட்ஸ்வீதி, ஆகியவற்றையும் திறந்து விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் வீதிகள் திறந்துவிடப்பட்டபோதும், இவ் வீதிகள் ஊடாக கனரக வாகனங்கள் ஓடும்போது பொலிசாரிடம் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தேசிய அரசாங்கம் அமைப்பதன் அவசியத்தை பௌசி வலியுறுத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின், அது தேசிய அரசொன்றின் மூலமே முடியுமென்றும், அவ்வாறு ஒருதேசிய அரசு அமையுமாயின் அதனை வரவேற்பதாகவும் முன்னாள் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவும் சட்டத்தை நிலைநாட்டவும் நிரந்தர சமாதானம் ஏற்படவும் தேசிய அரசு அமைவது அவசியமானதாகும்;

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்த்தையில் மாத்திரமே விடுதலைப் புலிகள் நம்பிக்கை கொள்வர்.

ஏன் எனில் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசுகள் முன்வைத்த விடயங்களை எதிர்க்கட்சியும் ஏனைய கட்சிகளையும் எதிர்த்து வந்தமையால் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவில்லை.

இதனால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதை வரவேற்பதாக முன்னாள் அமைச்சர் பௌசி அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## புதிய அமைச்சர்களின் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

புதிதாக பதவியேற்றுள்ள அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

இந்தவார இறுதிக்குள் அமைச்சர்கள் தமது தேர்தல் தொகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், இதனாலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (உ-5)

## இந்தியாமீது தாக்குதல் பிரதமர் ரணில் கண்டனம்

(கொழும்பு)

இந்திய பாராளுமன்றத்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில், இந்திய ஜனநாயகத்தின் கேந்திர ஸ்தானம் என்று கருதப்படும் நாடாளுமன்றம்மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும்,

இச்செயலை யார் செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீது நடத்தப்பட்ட மிகமோசமான வன்செயலை இலங்கை மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றார்கள் எனவும் அச்செய்தியில் தெரிவித்துள்ளார். (உ-4)

## வடக்கு-கிழக்கில் 172 பாடசாலைகள் இயங்குவதில்லையாம்

(திருகோணமலை)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 8மாவட்டங்களில் 172 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி 8 மாவட்டங்களிலுள்ள ஆயிரத்து 989 பாடசாலைகளில் தற்போது ஆயிரத்து 8·7 மாத்திரமே இயங்குவதாகவும், இவற்றில் 622 பாடசாலைகள் மிகவும் கஷ்டமான நிலையில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் விபரம் மாவட்ட ரீதியாக வருமாறு யாழ்ப்பாணம்-85, மன்னார்-21, கிளிநொச்சி-4, முல்லைத்தீவு -10, வவுனியா-12, திருகோணமலை-23, மட்டக்களப்பு-13, அம்பாறை-4 [உ]

## சுழற்சிமுறை கடன்

(யாழ்ப்பாணம்)

பெரும்போகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள புலோலி வடமேற்கு விவசாயிகள் கழகத்தைச் சேர்ந்த16 பேருக்கு அகதிகளுக்கான ஐ.நா: தூதரகத்தின்உதவியுடன் தலா 10ஆயிரம்ரூபா சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளது. (உ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின்வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பி.ப 2 30 மணிக்கு இல 19, அரசடி வீதியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

அங்கத்தவர்கள் யாவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 'கனவுகளின் எல்லை' அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டு. மத்திய கல்லூரி மாணவர் மன்ற ஆதரவில் இளங்கவிஞர் நல்லூர்

## யாழ். ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி நடைபாதையில் நோயாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைநோயாளர் விடுதிகளில் பெரும் இடநெருக்கடி நிலவுகிறது.

இதனால்பலநோயாளர்கள் விடுதிகளின் வெளிப்புறம் பாதையோரங்களில் தங்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, கடந்தவாரம் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் சீர்குலைந்து காணப்பட்ட கிளினிக்குகளும் தற்போதுசீராக இயங்கஆரம்பித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (உ-104)

## நாடாளுமன்ற உறுப்பினர் விபரங்கள் பதிவு

(கொழும்பு)

தேர்தலில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களை பதியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற பதிவு தொடர்பான உதவிச் செயலாளர் இராஜன் பத்திநாதர் தெரிவித்துள்ளார்.

விபரங்களை பதியும் நடவடிக்கைகள் நேற்று இடம் பெற்றதாகவும் இதன் போது 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது விபரங்களைப் பதிவு செய்ததுடன் எதிர் வரும் 18 ஆம் திகதியும் இப் பதிவு நடவடிக்கைகள் இடம் பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## கரவெட்டி வாள்வெட்டுச் சம்பவம் சந்தேக நபர்மன்றில்ஆஜர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

ஈ.பி.டி.பி.யின்ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் நால்வரை வெட்டிக் காயப்படுத்தியதன் பெயரில் கைது செய்யப்பட்ட ரஜனிக்காந்(வயது21) என்ற இளைஞனே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கும் படியும் இவ் வழக்கு தொடர்பான அடையாள அணி வகுப்பு இடம் பெறும் பட்சத்தில் நீதி மன்றில் ஆஜர்படுத்தும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ் வாள் வெட்டுச் சம்பவத்துடன் ஐ.தே.க. ஆதாரவாளர்களை தொடர்புபடுத்திக்கூறியதும்குறிப்பிடத்தக்கது.

எனினும், சந்தேகநபருக்கும் ஐ.தே.க கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தெரியவந்துள்ளது. [உ-10)

## பயங்கரவாத ஒழிப்புக்கு ஆதரவு தெரிவித்து சந்திரிகா இந்தியாவுக்கு கடிதம்

(கொழும்பு)

இந்திய பாராளுமன்ற கட்டடத்தின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக அந்நாட்டு அரசாங்கத்தால் எடுக்கப்படும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் ஜனாதிபதி கே.ஆர். நாராயணனுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

அனைத்து அரசாங்கங்களும் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படும் வரையில் அதற்கெதிராகதொடர்ச்சியான போராட்டத்தில் தம்மை எந்தவொரு காரணியும் திசைதிருப்பாத வகையில் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (உ)

## ஊர்காவற்றுறையில் புதிய ஆண்டில் பல்வேறு இலவச பயிற்சி

## ரத்வத்தயின் வீடு

புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி 8 மாவட்டங்களிலுள்ள ஆயிரத்து 989 பாடசாலைகளில் தற்போது ஆயிரத்து 8 7 மாத்திரமே இயங்குவதாகவும், இவற்றில் 622 டுள்ள பாடசாலைகளின் விபரம் மாவட்ட ரீதியாக வருமாறு யாழ்ப்பாணம்-85, மன்னார்-21, கிளிநொச்சி-4, முல்லைத்தீவு -10, வவுனியா-12, திருகோணமலை-23, மட்டக்களப்பு-13, அம்பாறை-4

[உ]

படிஅறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## ஊர்காவற்றுறையில்

# புதிய ஆண்டில் பல்வேறு இலவச பயிற்சி நெறிகள்

(ஊர்காவற்றுறை)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் இலவச பயிற்சி நெறிகளுக்கு புதிய ஆண்டில் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தையல், மனையியல், கைவேலை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுகாதாரம் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும்,

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இம் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-75)

# இல. மின்சார சபைக்கு 11 மில்லியன் கடன்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை சுமார் 11 மில்லியன் ரூபா கடன் பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் எரிபொருள் மின்சக்தி அமைச்சருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக மின்சாரசபை பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்கி வருவதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளது. அத்துடன் மின்சார சபை நிதி நெருக்கடியால் திண்டாடுகிறது.

இந்த நிலையில் மின்சார சபையை பொருளாதார ரீதியிலும் சேவை ரீதியிலும் வளர்ச்சியடைய செய்வதுடன் இது குறித்து வெகு விரைவில் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-5)

# 'கனவுகளின் எல்லை' அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டு. மத்திய கல்லூரி மாணவர் மன்ற ஆதரவில் இளங்கவிஞர் நல்லூர் த.ஜெயசீலனின் 'கனவுகளின் எல்லை' நூல் அறிமுக நிகழ்வு கவிஞர் ஜெ கி ஜெயசீலன் தலைமையில் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு வட்டு. மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை தென் இந்தியத் திருச்சபை பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெயநேசனும் ஆய்வுரையை சி.சரவணபவனும் (சிற்பி) நிகழ்த்தவுள்ளனர்.

(உ)

# தெய்வீக இன்னிசை விரிவுரை

(நல்லூர்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இம் மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு 'கலைஞான கேசரி சைவப்புலவர்' மீசாலையூர் ஏ.கே. ஏரம்பமூர்த்தி 'ஆனைமுகத்தோன் அருள்பெற்ற புண்ணியர் புருசுண்டி' என்ற பொருளில் பக்கவாத்திய சகிதம் தெய்வீக இன்னிசை விரிவுரை நிகழ்த்தவுள்ளார்.

(உ-103)

டடத்தின் மீது நேற்று முன் தினம் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக அந்நாட்டு அரசாங்கத்தால் எடுக்கப்படும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் யுள்ளார்.

அனைத்து அரசாங்கங்களும் பயங்கரவாதம் முற்றாக ஒழித்துக்கட்டப்படும் வரையில் அதற்கெதிரானதொடர்ச்சியான போராட்டத்தில் தம்மை எந்தவொரு காரணியும் திசைதிருப்பாத வகையில் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

(உ)

# ரத்வத்தயின் வீடு சல்லடை போட்டு தேடுதல் எனினும் மகன் அகப்படவில்லை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தயின் கண்டி இல்லம் இரகசிப் பொலிஸாரினால் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலின் போது கண்டியில் இடம்பெற்றபடுகொலைகளுக்குப் பொறுப்பானவரெனச்சந்தேகிக்கப்படும்அனுருத்த ரத்வத்தயின் மகன் லொகான்ரத்வத்தவைகண்டுபிடிக்கவே கண்டி மகியாவயிலுள்ள அவரதுவீடுசோதனையிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்நேரம் லொகான் ரத்வத்த அங்கு இருக்கவில்லை எனவும் படுகொலை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம் பெறும் என்றும் இரகசியப் பொலிஸ் பிரிவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-5)

## பஷீர் சேகுதாவூத்தை

# தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரச் செயலாளர் பஷீர் சேகுதாவூத்தை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் கப்புக் கொட்டு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எச் எம். சல்மான் தனதுபதவியை இராஜினாமா செய்துள்ளதாகவும் அந்த இடத்திற்கு பஷீர் சேகுதாவூத்தை நியமிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டிலேயே இவர் ஐ.தே.கட்சிதேசியப்பட்டியல் நாடாளு மன்றஉறுப்பினராக நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# செய்தித் துளிகள்

## ஆயுதங்கள் மீட்பு

[கொழும்பு]

முன்னாள் பிரதியமைச்சர் டி. எம் தஸநாயக்காவசிக்கும் ஆனமடுவ இல்லத்தில் பெருமளவு ஆயுதங்களும் வெடி மருந்துகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக சிலாபம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ரி. 56 ரக துப்பாக்கிகள் பதினொன்று 255 கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. [ந-4]

## வாழைச் சேனையில் அள்ளிய ஆயுதங்கள்

[வவுனியா]

வாழைச்சேனை -திருமலை ஆகிய இடங்களில் உள்ள பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவ புலனாய்வு தளத் தாக்குதலில்கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு,

- ★ ஏ.கே எல்.எம்.ஜி — 7
- ★ ரி. 81 — 7
- ★ எல் எம் ஜி — 5
- ★ ஆர் பி ஜி — 3
- ★ ரி.56ரக துப்பாக்கிகள் 43
- ★ 60மி மீற்றர்தோட்டா 4
- ★ 40 மி.மீற்றர் கொண்டு செல்லும்செலுத்திகள் 13
- ★ மற்றும்குண்டுகள் ,ரவைகளும் ஏராளமாக கைப் பற்றப்பட்டுள்ளன. [ம]

## மட்டக்களப்பில் தற்கொலைக்குண்டு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரிலுள்ள கிழக்குமாகாண பிரதிஅஞ்சல் மாஅதிபர் அலுவலகத்தில் தற்கொலையாளி பொருத்தும அங்கியுடன் கூடியகுண்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அலுவலக வாயிலில பொலித்தீன பையினுள் வயருடன்கூடிய பொருள் ஒன்று காணப்பட்டது இதுபற்றி குண்டு செயலிழக்கும பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை யடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற படையினர் அலுவலகத்தில இருந்த ஊழியர்களை வெளியேற்றிவிட்டு சந்தேகத்திற்கிடமான பொருளை சோதனையிட்டபோது தற்கொலைத் தாக்குதலில் பயன படுத்தும் குண்டெனக் கண்டறியப பட்டது.

இக்குண்டை செயலிழக்கச் செய்தபோது அலுவலக கட்டடங்கள் சில சேதமானதுடன் இரு படையினரும் காயமடைந்துள்ளனர்.

இந்த அலுவலகத்துக்ருகில் 233ஆவது படைபபிரிவின் முகாம அமைந்துளளமையு குறிப்பிடத்தக்கது. [ந-4]

## காரைநகர் சுற்றிவளைப்பு

[காரைநகர்]

காரைநகர் வக்குப் பகுதி நேற்று முன்தினம்கடற் படையினரால் சுற்றிவளைக்கப பட்டுதேடுதல் நடத்தப்பட்டுளளது.

நேற்றுமுன்தினம்அதிகாலை முதல்முறபகல 10 மணிவரை இடம்பெற்ற சுற்றிவளைப் பின்போது வீதியால சென்ற அனைவரும் சோதனையிடப் பட்டு விசாரணைக்குளளாக் கப்பட்டனர். [ந-238]

## அநாதரவான சடலம்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறைப் பகுதியில் சுமார் 77வயதுமதிக்கத தக்க வயோதிபர் ஒருவரின் சடலம் அநாதரவாககிடக்கக் காணப்பட்டது.

அண்மையில பொது மக்கள் இச் சடலத்தை கண்ணுற்று பொலிசாருக்கு தகவல தெரிவித்தனர் இதனை அடுத்து சடலத்தை பருத்தித்துறை நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அதனை அரசசெலவில் அடக்கம் செய்யுமாறு பணித்துள்ளார். [இ.10]

## நூல்கள் இரவல் பெறலாம்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினால் நூல்கள் இரவல் வழங்கும் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நவீன இலக்கியங்கள், மரபு இலக்கியங்கள். கூட்டுறவுக் கல்வி தொடர்பான நூல்களை இங்கு பெற்றுப்பயன் பெற முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-23)

## அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும், போது நிதி உதவி மற்றும் பொருள்ரீதியான அன்பளிப்புகளைப் பெற்றுக்கொள வதை தடைசெய்யும் அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்று நிருபம் வழமைபோன்று இவ் வருடமும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (உ-09)

## சோதனை நடவடிக்கை தீவிரம்

(மந்திகை)

வல்வை,புத்தூர் சோதனை சாவடிகளில் கடந்த சிலதினங்களா படையினரின்கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

வாகனத்தில் பயணம் செய்யும்வயோதிபர்கள்நோயாளர்களஉட்பட அனைவரும் இறக் கப்பட்டு கடுமையான சோதனைக் குட்ப டுத்தப்படுகின்றனர்.

அதேவேளை, யாழ்.சிறைச் சாலையிலிருந்து பருத்தித் துறை,சாவகச்சேரிநீதிமன்றங்களுக்கு அழைத்துவரப்பட்ட சிறைச்சாலை கைதிகளும் இறக்கி சோதனையிடப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-23)

## பண்ணிசைப் போட்டி

(நல்லூர்)

யாழ்.சைவபரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டுவரும், ''புண்ணிய நாச்சியம்மையார் தினப் பண்ணிசைப் போட்டி'', 2002ம் ஆண்டு முற்பகுதியில்நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைத் தேர்வுச் செயலர்மேற்கொண்டுள்ளார். (உ- 103)

## ஆலய முன்றல் சீரமைப்பு

(நல்லூர்)

கந்தர்மடம் ஆத்திசூடிவீதி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றல் மழைநீர் தேங்கி நிற்காத வண்ணம் செப்பனிடப்பட்டுள்ளது. [உ-103]

## பெற்றோல் அருந்தியநபர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

சோடா என எண்ணி, சோடாப் போத்தலினுள் இருந்த பெற்றோலை அருந்திய நபர், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்தசி. கிருபாகரன் (வயது 44) என்பவரே தவறுதலாக பெற்றோலை அருந்தியவராவார் (உ-23)

# அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் பணிப்பைஎதிர்பார்த்துகாத்துகிடக்கும் குடாநாட்டுக்கான சீருடை, பாட நூல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைமாணவர்களின் அடுத்த ஆண்டிற்கான பாட நூல்கள் இலவச சீருடைகள் என்பன இதுவரை வந்து சேராமைக்கு கப்பல் ஒழுங்கினை சம்பந்தப் பட்டவர்கள் செய்து தராமையே காரணம் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். தில்லைநடராஜா தெரிவித்தார்.

குடாநாட்டுக்கான பாட நூல்கள்,சீருடைகள் என்பன கப்பலில் ஏற்றப்படுவதற்குத் தயாரான நிலையில், பொதி செய்யப்பட்டு கல்வியமைச்சின் களஞ்சியத்தில் வைக்கப் பட்டுள்ளதாகவும்,

இதற்கானகப்பல் ஒழுங்கை உடன் செய்து தருமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் கோரியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவக் கட்டுப்பாடில்லாத கிளிநொச்சிமுல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சீருடை மற்றும் பாட நூல்கள் அங்கு போய்ச் சேர்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-19,10)

## பெற்றோல் விநியோகம் சீரில்லை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம எரிபொருள் நிலையத்தில் மக்கள் விநியோகத்திற்கென வழங்கப் படும் பெற்றோல் சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லை என்று பாவனையாளர் பலர் விசனம்தெரிவித்துள்ளனர். (உ-2)

## இராசி பலன்

15.12 2001

(கார்த்திகை 30,சனி)

பிரதமை பி இ 2 55 வரை

மூலம் பி இ 5.27 வரை

ராகுகாலம் 9 21-10.51

சுபநேரம் 3.21-4:51

### மேடம்

ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டம்,வயிற்றுக்கோளாறு, காரிய தாமதம்.

### இடபம்

எதிர்பாராத பிரச்சினை, போசனசுகம்,காரியதாமதம், வியாதி.

### மிதுனம்

வாகன சுகம், தனவரவு, காரியம கைகூடும், மதிக்கப் படுதல்.

### கடகம்

சத்துரு ஜெயம் காரிய அனுகூலம, தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.

### சிங்கம்

புத்திரரால் கவலை,கௌரவக்குறைவு,தொழில்நன்மை, குடும்ப சுகம்.

### கன்னி

தாய்வழிஉறவு, மனச்சஞ்சலம், சொத்துக்களால் நன்மை,காரிய தாமதம்.

### துலாம்

கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை,காரியநன்மை, சந்தோஷம்.

### விருச்சிகம்

உறவினர் மனஸ்தாபம், மாதர்நட்பு, காரியதாமதம், கௌரவக்குறைவு,

### தனுசு

சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் முயற்சி, சயனசுகம்,கலந்துரையாடல்.

### மகரம்

காரியஅலைச்சல்,உணர்ச்சி வசப்படல், தொழில்முன்னேற்றம்,வியாதி;

### கும்பம்

காரிய அனுகூலம், குடும்ப சுகம்,தன்லாபம், நல்லவரவேற்பு:

### மீனம்

செய்தொழில் மேன்மை, முயற்சி கைகூடும்,சுபசெய்தி, உற்சாகம்.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

வள்ளவன்

## பொ. ஐ. மு. எதிராக பட்டி வீரக்கோன் நீதிமன்றில் மனுத்தாக்கல்

[கொழும்பு]

பொதுஜனஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொள்ளக் கூடாதென மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் பட்டிவீரக்கோன் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

தேசியப்பட்டியலை தயாரிக்கும் பொழுது லங்காசமசமாசக்கட்சியுடன் செய்து கொண்ட உடன்பாட்டை பொதுஜன ஐக்கியமுன்னணி மீறிவிட்டதாலேயே இம்மனு நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். [ந-4]

## பரு.ஆஸ்பத்திரியில் நுளம்புத் தொல்லை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதாக விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் புகார் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் சுற்றாடலில் பெருமளவு புற்கள் பற்றைகள் காணப்படுவதனாலேயே நுளம்பு அதிகளவில் பெருகிவருவதாகத் தெரிவிக் கப்படுகிறது (உ-23)

## கடமை தவறும் பொலிஸார் மீது கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் கைப் பொம்மையாக இருந்துவந்த பொலிஸ் திணைக்களத்தை, பொதுமக்களுக்கு பக்கசார் பின்றி பணியாற்றக் கூடிய விதத்தில் மாற்றியமைக்க வேண்டுமென உள்நாட்டு பாதுகாப்புஅமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குற்றமிழைக்கும அல்லது கடமையில் தவறும் பொலிஸாரை இடம் மாற்றுவதால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது

அவ்வாறான உத்தியோகத்தர்கள் மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பதவி உயர்வுகளும் நிறுத்திவைக்கப் படுமென அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## சலவைத் தொழிலகத்தில் திருடர் கைவரிசை

(நல்லூர்)

கந்தர்மடம் அரசடிவீதி, டகையிரதக் கடவைப்பகுதியில் உள்ள சலவைத்தொழிலகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் திருட்டு ஆசாமிகள் தமது கைவரிசையைக் காண்பித்துப் பல்லாயிரம் ரூபா மதிப்புள்ள உடைவகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

தொழிலகக் கூரை ஓடுகளைப் பிரித்துஉள்ளேஇறங்கி இத் திருட்டினைப் புரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னரும் இங்கு திருட்டுக்கள் இடம் பெற்றமை குறிப் பிடத்தக்கது. [உ-103]

## சிவத்தமிழ் செல்வியின் பிறந்தநாள் அறக்கொடை விழா ஜனவரியில்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறக்கொடை விழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்விழாவை முன்னிட்டு அம்மையாரின் பிறந்தநாள் வைப்பில் வட்டிப் பணத்திலிருந்து பல்வேறு அறக்கொடைகள் வழங்கப் படவுள்ளன.

வன்னி மல்லாவி அரசினர் வைத்தியசாலைக்கு மருந்துகள் கொள்வனவிற்காக 75 ஆயிரம் ரூபா, மானிப்பாய் அரிமாக் கழகத்தினருக்குத கண் சத்திர சிகிச்சை செய்யு ஏழை நோயாளர்களுக்கு சத்துக்குளிகை கொள்வனவிற்காக 30 ஆயிரம் ரூபா தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த150 க. பொ. த சாதாரண தரம் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உபகரணக் கொள்வனவிற்கான தலா 400ரூபா.

இவையே அன்றைய தினம் மேற்கொள்ளப் படவுள்ள அறக்கொடைகளாகும்.

இதை விட தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய தென் கிழக்குப் பகுதியில் அமைக் கப்பட்டுள்ள ஆய்வு நூலகமும் அன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளது; (உ)

## இன்று ஒரு தகவல்

# எண்ணம்போல வாழ்வு

அரசன் ஒருவன் மாறுவேடத்தில் சிற்றூர் வழியாகக் குதிரையில் வந்துகொண்டிருந்தான். மிகவும் களைப்படைந்திருந்த அவன் குதிரையைவிட்டிறங்கி அருகே இருந்த கரும்புத் தோட்டத்திற்குச்சென்றான். அங்கே ஒரு பெண்மணி தன் கைக்குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். 'அம்மா! எனக்குத் தாகமாக இருக்கிறது. குடிப்பதற்கு ஏதேனும் தாருங்கள்', என்று கேட்டான் அரசன். 'கவலைப்படாதீர்கள். சுவையான கரும்புச்சாறே தருகின்றேன். மகிழ்ச்சியுடன் குடித்துவிட்டுச் செல்லலாம்' என்றாள் அவள்.

பக்கத்திலிருந்த ஒரு கரும்பைவெட்டிய அவள் அதை ஆலையில் இட்டுப் பிழிந்தாள். ஒரு பெரிய குவளை நிறையக்கரும்புச்சாறுகிடைத்தது; அதை வந்தவனிடம் நீட்டினாள் அவள். குவளையைவாங்கிய அரசன் 'ஒரு கரும்பிலிருந்தே இவ்வளவு சாறு கிடைக்கிறது. இந்தக் கரும்புத்தோட்டத்தால் இவளுக்கு நிறைய வருவாய் கிடைக்கும். வரியாக இவள் அரசுக்குச் செலுத்துவதோ மிகச்சிறிய தொகைதான். அரண்மனைக்குத் திரும்பியவுடன் இந்த நிலத்தின்மீது அதிக வரி போடவேண்டும்' என்று நினைத்துக் கொண்டே குடித்தான்.

குவளையை அவளிடம் நீட்டிய அரசன் 'இன்னும் ஒரு குவளை கரும்புச்சாறு தாருங்கள்' என்றான். இன்னொரு கரும்பை வெட்டிய அவள் அதை ஆலையிலிட்டுப் பிழிந்தாள். சிறிதளவு சாறே கிடைத்தது. வியப்படைந்த அவள் மேலும் இரண்டு கரும்புகளைப் பிழிந்தாள். அதிலிருந்தும் சிறிதளவே சாறு கிடைத்தது; பத்துக் கரும்புகளைப் பிழிந்தும் ஒரு குவளை நிறையச்சாறு கிடைக்கவில்லை. வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்ட அவள் 'கடவுளே! நான் என்ன தவறு செய்தேன். என் மீது வெறுப்புக்கொண்டாயா? அல்லது என் நாட்டு அரசன் இரக்கமற்ற கொடியவனாக திடீரென்று ஆகிவிட்டானா? இல்லாவிட்டால் நிலம் இப்படிப் பழிவாங்காதே' என்று அழுது புலம்பினாள்.

அவளின் கால்களில் விழுந்த அரசன் 'அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் நிலம் திடீரென வளம் இழந்ததற்குக் காரணம் நான்தான் நான் இந்நாட்டு அரசன். ஒரு கரும்பிலிருந்து ஏராளமான கரும்புச்சாறு வருவதைப் பார்த்தவுடன் இந்நிலத்தின் மேல் அதிக வரி விதிக்கலாம் என்று நினைத்தேன்' என்று நடந்ததை விளக்கினான் அரசன் 'அம்மா! வழக்கம்போல் தருகின்ற வரியையே கொடுங்கள் இப்பொழுது ஒரு கரும்பை வெட்டிச்சாறு தாருங்கள்' என்றான் அரசன். இப்பொழுது ஒரு கரும்பிலிருந்தே குவளை நிறையச் சாறு கிடைத்தது அதைக் குடித்துவிட்டு மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டான் அரசன். □

பேராசிரியர் எ. சோதி

# நெருப்புக்காய்ச்சல் தீவிரமாக பரவுகிறது

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் நெருப்புக்காய்ச்சலினால்பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

கடந்த இரண்டு தினங்களாக10இற்கும் மேற்பட்டோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

தொடர்ந்து பெய்துவந்த மழையில் முகாம்கள், அதனையண்டியுள்ளகுளங்கள். மலசலகூடங்கள் நிரம்பிய நிலையில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-23)

# அகில இலங்கை பொது ஊழியர்முன்னணி ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியை இந்த நாட்டின் மூவின மக்களும் ஏகோபித்து ஆதரித்த தன் அடிப்படையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய காத்திரமான நடவடிக்கைகளைப் புதிய அரசு மேற்கொள்ள வேண்டுமென அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

முன்னணியின் தலைவர் எஸ். லோகநாதன், செயலாளர் வே. நடராஜா ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில்,

சுதந்திரப் போராட்டத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தோளோடு நின்றுழைத்த ஒரு தேசிய இனம், யுத்தத்தினால் அழிந்துகொண்டிருப்பதை ஜீரணிக்க முடியாமல் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ- 5)

# சிறையிலுள்ள மாணவன் பாடசாலை சென்று பரீட்சை எழுத அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சி. சுகிர்தன்என்றபாடசாலை மாணவனை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த (சா-த) பரீட்சைக்குத் தோற்றயாழ்.நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சுதுமலையைச்சேர்ந்தமேற்படி மாணவன் இவ்வாண்டு முற்பகுதியில்அவரது வீட்டில் வைத்துபயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரீட்சை எழுதுவதற்கு யா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்துச் செல்லப்பட்டுபின்அழைத்து வரப்படுவார் எனத்தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# சிஹல உறுமயவின் தோல்விக்கு விடுதலைப் புலிகளே காரணம்

## கட்சியின் அறிக்கையில் தெரிவிப்பு

[கொழும்பு]

தென்னிலங்கைச் சக்திகளைப் பயன்படுத்தி தமது கட்சியை விடுதலைப் புலிகள் தோற்கடித்துவிட்டனரென்று சிஹல உறுமய புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளது.

நடைபெற்று முடிந்ததேர்தலில் இனவாதக் கட்சியான சிஹல உறுமய தோற்கடிக்கப்பட்டிருந்தது தமது தோல்விக்குரிய காரணத்தை விளக்கி சிஹல உறுமய அறிக்கையொன்றை வெளியிட்டது.

அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சிஹல உறுமயக் கட்சியை நிர்மூலமாக்கும் நோக்கம் விடுதலைப் புலிகளிடம் பலமாகக் காணப்பட்டது.

இதனை நிரூபிக்கும் வகையில் போரை ஆதரிக்கும் சக்திகளை தேர்தலில் தோற்கடிக்குமாறு மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சிங்கள மக்களைக் கேட்டிருந்தார்.

அதேபோல் லண்டன் நகரில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்எமது கட்சியை எச்சரிக்கை செய்து பேசினார். இவை சிஹல உறுமய தோல்வியடைய காரணமாகும் அத்துடன் ஜே.வி.பி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரமும் தமது தோல்விக்குக் காரணமென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கந்தையனை மேயராக்குமாறு அவசரபக்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் புதிய மேயராக எஸ்.கந்தையனை நியமிக்குமாறு கோரி கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தனுக்கும் உப தலைவர் ஆனந்த சங்கரிக்கும் அவசரதொலைநகல் செய்தியினை அரியாலை காந்தி சனசமூகநிலைய அங்கத்தவர்களும் அப பகுதி பொதுமக்களும் அனுப்பி வைத்துள்ளனர்.

தற்போதுமேயராக இருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட என். ரவிராஜின் இடத்திற்கு தற்போது உதவி மேயராக இருக்கும் சந்தையனைநியமிக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது. (உ-10)

# பிரதமர் 22 ஆம்திகதி இந்தியாவிஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 22 ம திகதி சனிக்கிழமை இந்தியா விற்கு விஜயம் மேற் கொள்ளவுள்ளார்.

அங்கு செல்லும் அவர் பிரதமர் வாஜ்பாய் மற்றும் முக்கிய அரசுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்என வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (உ -5)

# விபத்தில் படுகாயம்

(ஏழாலை)

சுன்னாகம் பகுதியில்நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில்இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இருவரும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காகயாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் குளமங்கையைச் சேர்ந்த ச. சிவபாதசுந்தரம் (வயது 41) மல்லாகம் மில் ஒழுங்கையைச் சேர்ந்த சதீஸ்கண்ணா (வயது 17) ஆகிய இருவருமே காயமடைந்தவராவர். (எ-12)

# க. பொ. த. பரீட்சார்த்திகளுக்கு மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வலிகிழக்கு தென் பகுதி ப.நோ.கூ. சங்கம்2லீற்றர் மண்ணெண்ணெய்வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

எனவே மேற்படி மாணவர்களின் பட்டியலை சம்பந்தப்பட்ட கல்லூரி அதிபரால்உறுதிப்படுத்தி ஜனவரி 3 ஆம் திகதிக்கு முன் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கும்படியும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதி அட்டையைக் கொண்டு வரும்படியும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது. (எ-9)

# பாலத்தால்செல்லும்மக்கள் துயரம் தீரவில்லை

(ஊர்காவற்றுறை)

யாழ்.பண்ணைப் பாலம் மீண்டும் கடந்த வாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்ட போதிலும் அதனூடாகப் பிரயாணம் செய்யும் பொது மக்களின் துன்பம் நீங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாலம் சீரில்லை எனக் கூறி படையினர் இதனூடாகப் பயணிக்கும் பொது மக்கள் பேருந்துகளில்இருந்து இறங்கி நடந்துசெல்லுமாறு பணித்து வருவதாக மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (உ-75)

# தேர்தலில் தோல்வியுற்ற மு. கா. வேட்பாளருக்கும் பிரதி அமைச்சர் பதவி

(கொழும்பு)

தேர்தலிலும்வெற்றிபெறாத தேசியப் பட்டியலிலும் இடம் பெறாத முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவருக்குப் பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்ட சம்பவம் இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் பஷீர் சேருதாவுத்துக்கே இவ்வாறு வீடமைப்பு பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவரை நீக்கிவிட்டு பஷீர் சேரு தாவூத்தை நியமிக்க முஸ்லிம காங்கிரஸ் தீர்மானித்திருந்ததாகவும், எனினும் தனது பெயரை தேசியப் பட்டியலில் சேர்த்த பின்பே பிரதியமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்வேனென்றும் அவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தேர்தலில் தோல்வியுற்றும் தேசியப்பட்டியலில் இடம்பெறாமலும் எம்பியாகத் தெரிவாகாத ஒருவர், எப்படி பிரதியமைச்சராக வரமுடியுமெனப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (உ-5)

# பொ. ஐ. மு. எம். பிக்கள் பலர் ஐக்கிய தே. கட்சிக்கு ஆதரவு வழங்கத் தயார்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக முன்னாள் அமைச்சர் ஏ.எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

தம்முடன், மேலும் இரு முன்னாள் அமைச்சர்கள உட்பட 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ. தே. கட்சிக்கு ஆதரவு வழங்குவரென்றும்;

இதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் அனைவரினதும் ஆதரவைத் திரட்டுவதற்காக முன்னாள் அமைச்சர் பலர் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்காக எந்தவொரு வகையிலும் சேவை செய்ய முடியுமாயின் அதனைத் தாம் புறக்கணிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ- 5)

## சிந்தனைக்கு விருந்து

### தக்கதோ? சற்று எண்ணுவீர்

தொலைக் காட்சி நல்ல கலையூடகமே
பல நன்மை உண்டென்ப துண்மை - நலனிடையே
வக்கிரங்கள் ஆபாசம் வந்து புகவிடுதல்
தக்கதோ சற்றெண்ணு வீர்.

-பழையவன்

# தீவிரவாதிகளின் செயலைக் கட்டுப்படுத்த
# எந்த வல்லமைமிக்க நாட்டாலும் இயலாது
## இந்தியா மீதான தாக்குதல் இதையே காட்டுகிறது

(புதுடில்லி)

எவ்வளவு வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தாலும் தீவிரவாதிகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியுமென கூறுமளவுக்கு எந்தவொரு நாடும் தயாராய்இல்லையென இந்திய தேசிய மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைமைப் புலனாய்வு அதிகாரி டி.ஆர். கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றகட்டடத்தின் மீதுதாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பான விபரங்கள் விரைவில் வெளியாகும். தாக்குதல்நடத்தியவர் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமையே இதற்கு உறுதுணையாக உள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை எவ்வளவுதான் முடுக்கி விட்டாலும் மீண்டும் தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூற முடியாது ஏனென்றால் தீவிரவாதம் அவ்வளவிற்கு வளர்ந்து விட்டதென்று அவர் மேலும் கூறினார். (உ-5)

### இந்திய நாடாளுமன்ற தாக்குதல்
## பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

இந்தியப் பாராளுமன்றத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக பாகிஸ்தானின் வெளியறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில்; இந்தியப் பாராளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலருக்கு காயமும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டதாக வெளியான செய்தியை பாகிஸ்தான் அதிர்ச்சியோடு நோக்குகிறது.

பாகிஸ்தான் அரசாங்கம் இத்தாக்குதலை வன்மையாகவும், எந்தவிதஐயப்பாடுமின்றி கண்டனம் செய்வதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5)

### இந்திய நாடாளுமன்றத்தின் மீது
# தாக்குதல் நடத்திய சக்திகள் பூண்டோடு அழித்தொழிக்கப்படும்
## தொலைக்காட்சியில் பிரதமர் வாஜ்பாய்

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்திய சக்திகள்அடியோடு அழித்தொழிக்கப்படுமென இந்தியப்பிரதமர் வாஜ்பாய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய பாராளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்து, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் பின்னர், தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய பாராளுமன்றத்தின் மீது விழுந்த அடி ஒட்டுமொத்தமாக இந்தியாவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதுகிறேன். தாக்குதலை நடத்தியவர்களும் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தவர்களும் நிச்சயம் அழித்தொழிக்கப்படுவர் என்று தெரிவித்தார் அவர்மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத்திற்கு எதிரானபோரில் செய் அல்லது செத்துமடி என்ற நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. இந்தியாவை ஸ்திரமிழக்கச் செய்வதற்கான பாரிய சதித்திட்டத்தின் ஒருபகுதிதான் நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதலாகுமென்றார்;

இதேவேளை, பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போர்இறுதிக்கட்டத்தை எட்டி விட்டதாகவும் பிரதமர் வாஜ்பாஜ் தெரிவித்தார். (உ-5)

### உலக தரிசனம்

## 30 வருட கால ஏவுகணை ஒப்பந்தம் அமெரிக்கா வாபஸ்

(வோஷிங்டன்)

பாலஸ்ரிக் ஏவுகணை ஒப்பந்தத்தில் இருந்து தான் விலகிக் கொள்ளப் போவதாக அமெரிக்காரஷ்யாவிற்கு அறிவித்துள்ளது.

30 வருடமாக காத்துவந்த இந்த ஏவுகணைஒபபந்தத்தில் இருந்து விலகுவது குறித்து அமெரிக்கஅதிபர்புஷ் முறைப்படி அறிவித்துள்ளார்.

ஏவுகணை திட்டத்தை பலப்படுத்தும் முகமாகவும் பயங்கர வாதத்தை அடக்குவதற்கு ஏவுகணையைப் பயன்படுத்த வேண்டியுள்ளதாலும் பாலஸ்ரிக் ஏவுகணை ஒப்பந்தத்திலிருந்துஅமெரிக்கா விலகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா மீதான பின்லேடனின் தாக்குதலை அடுத்தே இந்த முடிவுக்கு வந்ததாக அவதானிகள் கருதுகிறார்கள். (து)

## அமெரிக்க குண்டு வீச்சு விமானம் விபத்தில்சிக்கியது

(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்கு சொந்தமான வி-18 ரக குண்டுவீச்சு விமானம் ஒன்று இந்து சமுத்திரக் கடற்பரப்பில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இவ்விமானத்தில் பயணம் செய்த 4 விமானிகளும் பலியாகியுள்ளதாக தெரியவருகின்றது;

200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான, இவ்விமானம் விபத்துக்குள்ளான மைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. (உ-7)

### இந்தியாவின்
## பாதுகாப்பு அமைச்சரை பதவி விலக கோரிக்கை

(புதுடில்லி)

இந்திய பாதுகாப்புத் துறைக்கு, துபபாக்கிகள, ரவைகள குண்டுகள், பிரேதப்பெட்டிகள் போன்றவற்றை கொளவனவு செய்ததில் 35 முறைகேடுகள் இடம் பெற்றதாக தலைமைக் கணக்கு தணிக்கையாளர் லட்சுமி நாராயணர் தெரிவித்துளவார்.

தனியார் தொலைக் காட்சிக்கு லட்சுமி நாராயணன் பேட்டியளிக்கையில் பாதுகாப்பு அலுவலகம் வெளியிட்ட செய்திகளிலிருந்தே இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும்இதுபற்றியமுடிவை நாடாளுமன்றபொதுக் கணக்குக் குழு எடுக்க வேண்டும் என்றும தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சரைப் பதவி விலக வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஷ்ட் கட்சிகள தெரிவித்தன.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் முறைகேடுகள இருந்தால் பகிரங்க விசாரணைக்கு விடப்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (து)

### பின்னணிப் பாடகி
## ஆஷா போஸிற்கு தாதா ஷாஹிப் விருது

[புதுடில்லி]

சினிமாத்துறையில்அயராது செயலாற்றியமைக்காக பிரபல பின்னணிப் பாடகி ஆஷா போஸிற்கு 2000 ஆம் ஆண்டிற்கான பெருமைக்குரிய தாதா ஷாஹிப்பாலகேவிருது வழங்கப்பட்டுள்ளது;

அண்மையில் இடம் பெற்ற 48வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்திய ஜனாதிபதி ஆஷா போஸிற்கு இவ்விருதை வழங்கி பொன்னாடையும் போர்த்தினார்.

பரிசளிப்புவிழாவின் போது சபையோர் எல்லோரும் எழுந்து மரியாதை கொடுக்க ஆனந்தக் கண்ணீர் மல்க ஜனாதிபதியிடம் ஆஷாபோஸ் இவ் விருதைப் பெற்றார். (து)

## சிங்கப்பூர் சிறைகளில் 232 இலங்கையர்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் சிறைகளில் 232 இலங்கையர்கள தடுத்துவைக்கப்பட்டுளளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட்மாதம்முதல் ஒக்டோபா மாதம்வரையான காலப்பகுதியில் சட்டவிரோதமாக நாடடிறகுள பிரவேசித்தமை விசா காலாவதியாகிய நிலையில் தங்கியிருந்தமை போன்ற காரணங்களுக்காகவே இவர்கள் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுளள தாக சிங்கப்பூர் பொலிஸார் தெரிவித்துளளனர். (உ-5)

### ஜம்மு எல்லைப் பகுதியில்
## தொடர் குண்டுவெடிப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரின் எல்லைப் பகுதியல் நேற்று முன்தினம் காலையலிருந்துஇடை விட்டு இடையாக 18 குண்டுகள் வெடித்துள்ளன.

பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து விரட்டப்பட்ட தீவிரவாதிகளின் கூட்டுச்செயல் இதுவென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொடர் குண்டு வெடிப்பின்னால்எவ்விதஉயிர் சேதங்களும் ஏற்படவில்லை;

காஷ்மீர் எல்லைப் புறப் படைவீரர்களைகுறிவைததே இத்தொடர் குண்டுகள் 20 வைக்கப்பட்டதாகவும் அவற்றில் இரண்டு வெடிக்கவில்லையென்றும் ஜம்முகாவல் துறையினர் தெரிவித்தனர். (து)

### விளையாட்டு செய்தி

### உலகக்கிண்ண உதைபந்தாட்டம்
## இங்கிலாந்து அணிக்கு சம்பியனாகும் வாய்ப்பு

(லண்டன்)

2002 இல் தென் கொரியாவிலும் ஜப்பானிலும் நடைபெறவுள்ள 17வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து அணிக்கே இம் முறை சம்பியனாகும் வாய்ப்பு அதிகம் என்று உலகின் முன்னணி உதைபந்தாட்ட வீரர் பீலே கூறி உள்ளார்;

டெஸ்லி ஸ்டார், பத்திரிகைகு வழங்கிய பேட்டியிலேயே பீலே இவ்வாறு கூறினார்;

மேலும் அவர் கருத்துக் கூறுகையில், அடுத்த உலகக் கிண்ணத்தை வென்றெடுக்கும் சகல வாய்ப்புக்களையும் இங்கிலாந்து அணி கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டி உள்ளார்;

மூன்று முறை பிரேசில் அணி உலகக் கிண்ணத்தை வெல்ல உதவிய பீலே தனது அனுபவத் திறமையையும் இங்கிலாந்து அணியின் அண்மைக் கால வளர்ச்சிப் போக்கையும் கருத்திற் கொண்டே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## போயா தினத்தில் டெஸ்ட் போட்டி நடைபெறாது

(கொழும்பு)

சிம்பாவே அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளது.

இதற்கான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது;

போயா தினங்களில் கிரிக்கெட் ஆடக்கூடாது என அமைச்சரவை மட்டத்தில்தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கிணங்க நான்காம் நாள் ஆட்டம் நடைபெற வேண்டிய 30 ஆம்திகதி போயா தினமாகையால் அன்று ஆட்டம் நடைபெறாது.

அதனால் மேலும் ஒரு நாள் கூடுதலாக ஆட்டம் நடைபெறும். இதன்படி 27, 28, 29, 31 மற்றும் ஜனவரி முதலாம் திகதிகளிலேயே ஆட்டம் நடைபெறவுள்ளது; (உ-2)

## பயங்கரவாத சட்டத்திற்கு பிரிட்டன் அங்கீகாரம்

(லண்டன்)

பிரிட்டனின்பாராளுமன்றம் வெளிநாட்டு சந்தேக நபர்களை விசாரணையின்றி தடுத்து வைக்கக் கூடிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அமுல் செய் வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமெரிக்கா மீதான தாக்குதலை அடுத்து கொண்டுவரப்பட்ட இந்தச்சட்டம் மனித உரிமை அமைப்புகளின்பலத்த எதிர்ப்புக்குஉள்ளாகியுள்ளது

அவசரகால அதிகாரங்கள் இரண்டாம்உலகமகாயுத்தம், 1991ஆம் ஆண்டின் வளைகுடா யுத்தம் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டது. இதில் பயங்கரவாதிகளுக்கு நிதி திரட்டலைக் கட்டுப்படுத்துவது. விமான நிலையங்களுக்கு பாதுகாப்பை அதிகரிப்பது போன்றனவும் இடம் பெற்றுள்ளன. (எ)

ஒக்காங்கு நாடித் தலைச்
செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து
**குறள்**

=================

# வலம்புரி

=================

## இந்தியா செல்வதுஏன்?

எந்தச் சிங்கள அரசும் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணாது. இது சர்வ நிச்சயம். இந்த சர்வ உண்மை விடுதலைப் புலிகளுக்கும் நன்கு தெரியும் எனினும் நம் மண்ணில் பதவி ஆசை பிடித்தவர்கள் ஏதோ ஒரு வகையில் பொய் பேசி - புதுப்புது மொழி நடை எடுத்து ஆலாவர்ணம் காட்டிப் பதவிக் கதிரையைக் கைப் பற்றி விடுகின்றனர். நாம் பாராளுமன்றம் சென்றால் யுத்தத்தை அடியோடு அழித்து விடுவோம் என்றவாறு பேச்சுக்கள் அமைந்திருந்தது ஆனால் இப்போது அவ்வாறு கூறிய தமிழ் எம்.பிக்கள்மௌனமாக இருப்பது கடந்த காலத்து பழக்க தோஷம் போல் தெரிகிறது.

எதுவானாலும் தமிழ்க் கட்சிக்கூட்டமைப்பு தான் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விடுமாயின் அவர்களே தமிழ்த் தேசத்தின் முதற் துரோகிகளாகக் கணிக்கப்படுவர். சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசை வீழ்த்துவதற்காக ரணில் விக்கிரம சிங்காவிற்கு அருகில் இருந்து படமெடுத்த கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரியும், காங்கிரஸின் தலைவர் அ. விநாயகமூர்த்தியும் இப்போது பேசாதிருப்பதன் நோக்கம் விளங்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார்கள் என்ற கோதாவிலேயே 83களில் தமிழர்களை வெட்டிக் கொன்று கொலை வெறியாட்டம புரிந்த ஐ.தே. கட்சியின் தற்போதைய தலைவர் ரணிலுக்கு அருகில் புன்சிரித்த முகத்துடன் ஆனந்தசங்கரியும் விநாயகமூர்த்தியும் அருகில் இருந்தனர்.

ஆனால் தற்போது இனப் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு ரணில் இந்தியா செல்லவுள்ளார். ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு முதற் பகைவீடாக இருப்பது இந்தியா என்பது மறக்க முடியாத உண்மை.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தடையைநீக்கி அவர்களுடன் முதற்கட்ட பேச்சை ஆரம்பித்துவிட்டு ரணில் இந்தியா செல்வாராயின் அது நியாயமாகலாம். புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு இந்தியாவின் ஆலோசனையைரணில்பெறமுயற்சிப்பது ஒரு பெரும ஏமாற்றுவித்தை. இதனை கூட்டமைப்பினர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# ஒழுக்கமும், பண்பும் மிக்க இளைஞர் உருவாக

# பெற்றோர் ஆசிரியர் பங்காற்ற வேண்டும்

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்**

கடந்தசில வருடங்களாக யாழ். குடாநாட்டில் இளைஞர்களிடையே ஒழுக்கமும் பண்பும் மிகவேகமாகக் குன்றி வருவது கவலைதரும் கசப்பான உண்மை கல்வியின் முதன்மை நோக்கம் ஒழுக்கமும் பண்புமுள்ளவொரு சமுதாயத்தை உருவாக்குவதே. கல்லூரிகள நல்லொழுக்கமும் பண்புமுள்ள இளைஞர்களை உருவாக்கவேண்டும் தோற்றத்தில் சீர்மைசெய்யும் தொழிலில் வருகை ஒழுங்கும் நேர ஒழுங்கும், நலிந்தோர் மேல் இரக்கம். மூத்தோரையும் கற்றோரையும் மதித்து நடத்தல், உண்மை-நேர்மை-நீதி-நியாயம் ஆகியவற்றைக் கைப்பிடிக்கஉறுதி பூணல், நீதியை நிலைநாட்டுவதில் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ளல். தயாள குணம் ஆகியன ஒரு பிள்ளை பாடசாலை நாட்களில் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களிற் சில

'ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது வள்ளுவர் வாக்கு

ஒருவன் தனது நடத்தையைச் சுயகட்டுப்பாட்டுடன் முன்னெடுக்க முடியாதவனாயின் அவன் கற்றதனால் எதுவித பயனுமில்லை.

### 1960ற் குமுன் ஆசிரியர்கள்

அறுபதாம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர்கள் படித்த புத்திக்கூர்மையுள்ள பெருமதிப்புக்குரிய சமூகத் தலைவர்களாகப்போற்றப்பட்டார்கள். இளைஞர்களிடையே மிகச்சிறந்த ஒழுக்கத்தைப் பேணுவதில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகித்தார்கள். ஒழுக்கம் பேணுவதிலும் செயற்படுத்துவதிலும் பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு முழுமையான ஆதரவு வழங்கினார்கள். துரதிர்ஷ்டவசமாக கல்வி வியாபாரமாக மாறியதும் தனியார் கல்வி நிறுவனங்கள் காளான்கள் போன்று முளைத்தெழுந்ததும் மாணவர்களை ஆசிரியர்களின் செல்வாக்கு வலயத்திற்கு வெளியே இழுத்துச் சென்றுவிட்டது.

ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையை அடைய முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள்தான் மாணவர்களை முழுமையானவர்களாக வடிவமைப்பவர்கள் என்பதை மாணவர்களும் சமுதாயமும் உணரக்கூடிய முறையில் ஆசிரியர்களின் செயற்பாடுகள அமையும்போது ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையை மீளப் பெறுவார்கள். ஆசிரியர்கள் கற்பித்தல் மூலம் அறிவூட்டுபவர்கள் மட்டுமல்ல. அவர்கள் மாணவர்களுக்கு வாழ்ந்து காட்டும் மாதிரிகளாகவும் அமைய வேண்டியவர்கள்.

இன்று அநேகமான பெற்றோர்களின் ஒரே நோக்கம் தமது பிள்ளைகளை எவ்விதத்திலும் க.பொ.த. சாதாரண பரீட்சையில் பத்து D யும் உயர்தர பரீட்சையில் மூன்று A யும் பெறச்செய்வது என்ற அளவில் மட்டுமே உள்ளது. பிள்ளைகள் நல்ல பெறுபேறுகள் பெறப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முழு முயற்சி எடுக்க வேண்டியவர்களே. அதேவேளை மாணவர்கள் சமூகத்திற்கு உதவாதவர்களாக வளர்வார்களாயின் இப் பெறுபேறுகளைப் பெற மாணவர்களுக்கு கல்வியூட்டுவதனால் என்னபயன். பெற்றோர்கள தமதுபிள்ளைகள் தேர்வில் நல்லபெறுபேறுகள் பெற முயற்சிப்பதுபோல் அவர்கள ஒழுக்கம், பண்பு, அடக்கம் உடையவர்களாக வளர்வதையும் உறுதிசெய்து கொள்வது மிகவும் அவசியம்.

### பெற்றோர் கடமை

பிள்ளையை ஒழுக்கத்திற்குப்பெயர் பெற்றபாடசாலையொன்றுக்கு அனுப்பிவிட்டோம் பிள்ளையை ஒழுக்கமுள்ளதாக வளர்த்தெடுப்பது பாடசாலைஅதிபரினதும் ஆசிரியர்களினதும் கடன் என்று நினைத்துப்பெற்றோர்கள் தமது பொறுப்புகளிலிருந்து ஒதுங்கிக் கொள்ளக் கூடாது. பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும்பங்குக்கு இரண்டாம் பட்சமானதல்ல. வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுதல் வேண்டும் பெற்றோர் ஒழுக்கவீனமாக நடந்துகொண்டு, பிள்ளைகள் வேறுவிதமாக நடக்கவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. காலையில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவது முதல் இரவு தூக்கத்திற்குச் செல்லும்வரை பிள்ளைகள் வீட்டிற் செலவிடும் பொழுதை எவ்வாறு செலவிடவேண்டும், வீட்டிலுள்ளோர்களுடனும் அயலவர்களுடனும் எவ்வாறு பழகுதல் வேண்டும் என்பதை அன்பு அரவணைப்புடன் பழக்கவேண்டிய கடமை பெற்றோருடையது. வீட்டில் மாணவர்தமது பாடங்களைக் கற்றற்குகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர் கடன். பிள்ளைகள் தமது பாடங்களைப் படிக்கவேண்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டு, பெற்றோர்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்குமுன் சதா அமர்ந்திருப்பதும், வானொலிப் பெட்டியை இரைய விட்டுக்கொண்டிருப்பதும் பிள்ளைகளின் கவனத்தைத்திசை திருப்பக்கூடிய முறையில் சண்டையிட்டுக் கொண்டோ குடும்பப் பிரச்சினைகளையும் ஊர்ப்பிரச்சினைகளையும் நாட்டுப்பிரச்சினைகளையும் பற்றி அரட்டையடித்துக் கொண்டிருப்பதுவோ மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவமாட்டாது.

வீட்டிற்கு வெளியே செல்லும்போது, பொது இடங்களிலும், வீதிகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள். பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்கிறார்களா என்பவற்றை அவதானிக்க வேண்டியது பெற்றோரின் கடமை. எனது பிள்ளை அவ்வாறு நடக்க மாட்டான்- நடக்கக்கூடியவனல்ல-என்ற நிலைப்பாட்டை எடுப்பது முட்டாள்தனமானது. குழந்தைகள் எல்லாம் நல்லகுழந்தைகளாகவே பிறக்கின்றன. ஆனால் அவர்கள் எவ்வாறானவர்களாக பரிணமிக்கிறார்கள் என்பது அவர்கள் எவ்வாறான சூழலில் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள் என்பதால் நிர்ணயிக்கப் படுகிறது சமூகம், பாடசாலை, வீடு மூன்றும் பாடசாலை செல்லும் பிள்ளைகளின்ஒழுக்கத்திற்கு பங்களிப்புச் செய்கின்றன. இதனைப் பெற்றோர் கருத்திற்கொள்வது நன்மை பயக்கும். பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலைச்சுற்றாடலிலுள்ளசமூகத் தலைவர்கள் அடிக்கடி சந்தித்து பாடசாலைச் சுற்றாடலில் இளைஞர்களின் நடத்தைகளை ஆய்வுசெய்வது நன்மை தரக்கூடும்.

### தனியார் கல்விநிறுவனங்கள்

தற்போது சூரிய உதயம் முதல் அஸ்தமனம்வரை, முழு நேரத்தையும், எல்லாத் தரத்திலுள்ள பிள்ளைகளும் பாடசாலைகளில்அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில், தமது ஆசிரியர்கள் அல்லது பயிற்றுவிப்பவர்கள் கூறுபவற்றைக் குறிப்பெடுப்பதில் அல்லது அவர்கள் கொடுக்கும் பயிற்சிகளைச் செய்வதில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

அவர்களைத் தினமும் நாள் முழுவதும்வேலைசெய்யுமாறு படிக்குமாறு வற்புறுத்துவதன் மூலம் பெற்றோராகிய நாம் அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிப்பது ஒரு ஆரோக்கியமான செயற்பாடல்ல.

மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்க அனுமதிக்காதவாறு இன்று பிள்ளைகளிடையே பாடங்களைதிணிக்கப்படுவதும் இன்னுமோர் ஆரோக்கியமற்ற விடயம் க.பொ.த. சாதாரண வகுப்பு வரையாவது மாணவர்களை தனியார் கல்விநிறுவனங்களுக்கு அனுப்பக்கூடாது என்பது எனது அபிப்பிராயம். □

---

**புதிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்**

# மீனவர் பிரச்சினைக்கு முடிவு காணும் வகையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க முடிவு

**அரசின் அடுத்த நடவடிக்கைக்காக காத்திருப்பு**

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக வடமராட்சிப் பகுதி மீனவர்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்களுக்கு முடிவுகட்டுமாறு நாடாளுமன்றத்தில் அழுத்தம்கொடுப்பதெனவும்,

தனது கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காத பட்சத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கப் போவதாகவும் வல்வெட்டித்துறை நகரசபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நாரந்தனைப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவத்தில் படுகாயமடைந்த இவர், நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை மற்றும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி ஆகிய இடங்களுக்கு அம்புலன்ஸ் வண்டியில் சென்று பொதுமக்களுடன் அளவளாவிய வேளை இதனைத் தெரிவித்தார்.

மக்களின் மாலைமரியாதைக்கு மத்தியில் அம்புலன்ஸ் வண்டியில் இருந்தவாறே உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர் பேலும் கூறுகையில்;



எதிர்வரும் 19 ஆம் திகதி ஸ்ரெச்சரில் பாராளுமன்றம் சென்று தனக்கு ஏற்பட்ட நிலையை சர்வதேசத்திற்கு உணர்த்தப் போவதாகவும்,

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அரசை வலியுறுத்தப் போவதாகவும் குறிப்பிட்டார்.

(உ-43)

---

## தினசரி தியானம்

## குறி

குறியாகக்கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்ப தெக்கலாம்?

**பத்திரகிரியார்**

இறைவா, நான் அடைதற்குரிய குறியாய் இருப்பவன் நீயே. இதை நான் யாண்டும் நினைவில் வைத்துக் கொள்வேனாக.

அண்டத்திலுள்ள யாவும் புறப்பட்ட இடத்தையே திரும்பிப் போய்ச் சேர்வதைக் குறியாகக் கொண்டிருக்கின்றன. கடலினின்று கிளம்பிய நீராவி திரும்பவும் கடலையே சென்றடைகிறது. நாம் கடவுளிடமிருந்து புறப்பட்டு வந்தவர்கள். திரும்பவும் அவரைச் சென்றடைவது நமது குறியாகும்.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.**

# ஆட்டோவில் சென்ற சமயம் பெற்றோரை இழந்த குழந்தைக்கு நிதி உதவி

[கொழும்பு]

கடந்த வருடம் ஆட்டோ வில் சென்ற சமயம் பளைப் பகுதியில் இடம்பெற்ற இரா ணுவ நடவடிக்கையில் சிக்கி உயிரிழந்த பெற்றோரின் குழ ந்தையின் நலன் கருதிமாதாந் தக் கொடுப்பனவு வழங்க தென்பகுதி வர்த்தகப் பிர முகர்ஒருவர் முன்வந்துள்ளார்.

சிலிங்கோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாள ரும் வர்த்தகப்பிரமுகருமான தேசமானிய லலித்கொத்தலா வல என்பவரே பிரஸ்தாப குழந்தைக்கு உதவும் முகமாக மாதம் மூவாயிரம் ரூபாவை வழங்கமுன்வந்துள்ளார்.

துப்பாக்கி சூட்டு சம்பவத் தின் போது குழந்தையின் தாயும் தந்தையும் இறந்தமை யும் அதன்போது உயிர் தப் பிய குழந்தையை உறவினர் கள் பராமரித்து வருவதும் தெரிந்ததே. [ந-4]

---

## வவுனியா

அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதி மன்றத்தில்தாக்கல் செய் திருந்தார் விசாரணைகளை மேற்கொண்ட பிரதம நீதிய ரசர் சரத் என் சில்வாமற்றும் நீதியரசர்களான சிராணி பண்டார நாயக்கா விக்டர் எஸ்.யாப்பா ஆகியோர் அடிப் படை மனித உரிமைகள் மீறப்பட்டமைக்காக மனுதா ரருக்கு 12500ரூபாவை நட்ட ஈடாக வழங்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர். (ந-4)

---

## தேசிய

கும் என்றுகூறினார்.

நாட்டில் காணப்படும் முக் கியபிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இரு பிர தான அரசியல் கட்சிகளுக்கும் இத்தேர்தல் மூலம் மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

நீண்டகாலமாக நாட்டின் பின்னடைவிற்கு காரணமாக இருந்துவரும் பயங்கரவாதத் தை முடிவுக்குக் கொண்டுவர இதுவரை எந்தஒரு ஆட்சியா ளர்களாலும் முடியவில்லை. இதற்கு அவர்களின் தீர்க்கதரி சனமற்ற செயற்பாடுகளேகா ரணமாகும் இந்நிலையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க அனைத்துக்கட்சி களும் முன்வர வேண்டு மென்று வேண்டுகோள் விடுத் துள்ளார். [வ]

---

## தேசியநல்லிணக்க

அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை வெற்றிய ளிக்கும் பட்சத்தில் முன்னாள் அமைச்சர் பௌஸி தலைமை யில் ஆகக்குறைந்தது பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்க ளாவது தேசிய நல்லிணக்க அரசுக்கு ஆதரவு வழங்கு வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. (வ)

---

## அமைச்சரவையில்

கல்வி அமைச்சராக பதவி ஏற்றுள்ளகருணசேன கொடித் துவக்குக்கு அமைச்சரவை அந் தஸ்த்து வழங்கப்படாதஅதே நேரம் மகளிர் விவகார அமைச்சுக்கு அமைச்சரவை அந்தஸ்த்து வழங்கப்பட்டுள் ளதாகச் சுட்டிக்காட்டப் பட் டுள்ளது. [வ)

---


## என் அன்பார்ந்த யாழ், குடாநாட்டு மக்களே!

கடந்த தேர்தலில் என்னை வெற்றிபெறச் செய்து பாராளுமன்றம் அனுப்பியமைக்கு மீண்டும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த தேர்தலில் என்வெற்றிக்குத் தோளோடு தோள் நின்று கடுமையாகஉழைத்த என் உயிரிலும் மேலான எனது நண்பர்கள். ஆதரவாளர்கள் எனது வெற்றியினைப் பத் திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவது எனது வெற்றியின்பால் நீங்கள் கொண்ட மகிழ்ச்சி யினை மிகவும் தெளிவாக வெளிக்காட்டு கின் றது என்பதில் ஐயமில்லை.

எனினும் நாம் அனைவரும் கடந்த தேர்தலில் எந்த 'அரசியல் கலாசாரம்' யாழ் குடாநாட்டிலிருந்து அறவே நீக்கப் படவேண்டும்என்றுகடுமையாக உழைத்து அந்த இலக்கு எட்டப்பட்ட நிலையில்மீண் டுமஅதே 'அரசியல்கலாசாரம்' யாழ் குடா நாட்டில் தலைதூக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

எனவே என் அன்பிற்கினிய மக்களே! தாங்கள் என்மீது கொண்ட அன்பிற்கும், ஆதரவிற்கும் நான் சிரம் சாய்க்கும் அதே வேளை, நீங்கள் என்னைப் பத்திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவதற்குப் பதிலாக அதற்கு செலவாகும் பணத்தினை ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களின் ஒருநேர பசியாற உத வுமாறு மிகவும் தாழ்மையுடன் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**தி. மகேஸ்வரன்**

இந்து சமய கலாசார அமைச்சர்

[கி-3004]


# கூட்டமைப்புஅனுசரணையாளர்கள் பதவி நீக்கப்பட வேண்டியவர்கள்

## காங்கிரஸ் செயலாளர் குமரகுருபரன்

[கொழும்பு]

நான்குதமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் அனு சரணையாளர் கள் தமிழர்விடுதலைக் கூட்ட ணியினர்கூட்டிய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்களே யொழிய நான்குகட்சிகளின் கூட்டமைப்பினால் அவர்கள் தெரிவு செய்யப்படவில்லை எனவேஅர்களை பதவிநீக்கம் செய்யவேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் கலாநிதி ந குமரகுருபரன் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

நான்குதமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் அனுசரணை யாளர்கள் என்று தம்மைத் தாமேகூறிக் கொண்டு தேர் தல்முடிந்தகையோடு ஐக்கிய தேசிய முன்னணித் தலைவ ரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித் துப் பேசியுள்ளார். இதுஅவர் களின் தவறானதொரு நட வடிக்கையாகும்.

தேர்தல் வேட்புமனுத் தாக்கலின் போது மட்டக் களப்பிலும்,திருகோணமலை யிலும் காங்கிரஸின் இரு வேட்பாளர்கள் நியமிக்குமாறு கோரிய போ தும் கூட்டமைப்பின் அனுசர ணையாளர்கள்எதுவித நட வடிக்கையும் எடுக்கவில்லைஎன் றும் குமரகுருபரன் குற்றம் சாட்டியுள்ளார். (வ]

# பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட உலக நாடுகள் இணையவேண்டும்

## இந்தியப்பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு]

பயங்கரவாதத்தை ஒழிப் பதற்கு இந்தியாவுக்கு ஒத்து ழைப்பு வழங்க இலங்கைதயா ராக உள்ளதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தி யப் பிரதமர் வாஜ்பாயிக்கும் குடியரசு தலைவர் கே. ஆர். நாராயணனுக்கும் கடித மூலம் தெரிவித்துள்ளார்

இந்தியப் பாராளுமன்றத் தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குறித்து இந்தியப் பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் ஜனாதிபதி சந் திரிகா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித் திருப்பதாவது.

பயங்கரவாதத்தை ஒழிப் பதற்குஇந்தியாவுடன் அனைத் துலக நாடுகளும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் பாராளுமன்றத்தினுள்இருந்த உறுப்பினர்கள் பிரதமர் அமைச்சர்கள் தெய்வாதீன மாக உயிர் தப்பிக் கொண்ட மை தனக்கு மகிழ்ச்சி அளிப் பதாகவும் தெரிவித்துள்ளார் (வ)

# பிரதமர் ரணிலிடம் அமைச்சுஒப்படைக்கப்பட்டது

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிகா குமார துங்கா தன் வசம் வைத்தி ருந்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி அமைச்சுக்களை நீண்டநேர ஆலோசனையின் பின்பே பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிடம் ஒப்ப டைத்ததாக இப்போது தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி தன் வசம் இருந்த பாதுகாப்பு அமைச் சினை பாதுகாப்பு சபையின் ஆலோசனையைப் பெற்ற பின்பே அந்த அமைச்சை ரணிலிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மாணவர் கள் சிலரின் க. பொ. த (சா) தரப் பரீட்சைக்கான அனு மதி அட்டைகள் இல 303கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமை ந்துள்ள சிறிமுருகன் தொ லைத் தொடர்பு நிலையத் திற்கு கிடைக்கப்பட்டுள்ளது

உரிய மாணவர்கள் தொ டர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் எனஅறிவிக் கப்பட்டுள்ளது: (ந)

---

## தேர்தல்

வைக் குழு ஒன்று நியமிக் கப்பட்டுள்ளது இக்குழு கூட் டுத்தாபனங்கள், திணைக்க ளத் தலைவர்களது தகைமை களை நிர்ணயித்து அவற்றை நன்கு பரிசீலித்த பின்பே நியமனங்கள் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான பின்பு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசி னால் வழங்கப்பட்டுள்ள அனைத்து நியமனங்களையும் ரத்துச்செய்வதென அமைச்ச ரவை தீர்மானித்து இருப்ப துடன், அடுத்த வருடத்திற் கான வரவுசெலவுத் திட் டத்தை 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடுப்பகு தியில் சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ)

## சந்திரானந்த டிசில்வா இராஜினாமா

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செ யலாளர் சந்திரானந்த டிசில் வா தனது பதவியை நேற்று முன்தினம்இரா ஜினாமாச்செய் துள்ளார்

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்காவிடம் இருந்த பாது காப்பு அமைச்சு ஐக்கிய தேசி யக்கட்சியின் அமைச்சரவைக் குக் கைமாறியதை அடுத்தே சந்திரானந்த டிசில்வா இரா ஜினமாச் செய்துள்ளார். (ம)

## புளொட் உறுப்பினர் சரண்

(வவுனியா)

கடந்த வாரம் வெள்ளிக் கிழமை ரெலோ ஆதரவாளர் கள் இருவர் கொல்லப்பட்ட மை தொடர்பாக பொலிசாரி னால் தேடப் பட்டுவந்த புளொட் இயக்க உறுப்பினர் கள் மூவரில் ஒருவர் நேற்று வவுனியா பொலிஸ் நிலையத் தில் சரண் அடைந்துள்ளார்.

வவுனியா வைரவப் புளியங் குளத்திலுள்ள புளொட் அலு வலகப் பொறுப்பாளரான வினோத் என்பவரே சரண டைந்த வராவார்: (ந-4)

## சந்தேக நபர் கைது

[மந்திகை]

பன்னிரண்டு வயதுச் சிறுமி யொருவர் பாலியல் வன் புணர்ச்சிக்கு உட்படுத்தப் பட்ட சம்பவம் அண் மையில் அல்வாய் கிழக்குப் பகுதியில் நடைபெற்றுள் ளது.

இந்த சம்பவம் தொடர் பாக இதே இடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளை ஞன் ஒருவர் நெல்லியடிப் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்நிலை யில் ஆஜர் செய்யப்பட்டார்.

சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் இளைஞனை எதிர்வரும் 18 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார். [ந-23]


30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ். பி, நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

கி-1986)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.